**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 |
| Name : | திரு. பிரசாத் |
| Father's Name/Husband Name: | திரு. ராமலிங்கம் |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 28 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் Medical Representative ஆக பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார். அ.சா.2 எனது தகப்பனார். ப.சா.4 ரம்யா எனது தங்கை. ஆஜர் ஆகாத எதிரிகள் இருவரையும் தெரியும். 1வது எதிரி சீனி எனது அப்பாவின் அண்ணன். என் அப்பாவுடன் சேர்த்து அவருடன் பிறந்த நபர்கள் 4 நபர்கள். எனது அப்பாவிற்கு சொந்தமான விவசாய நிலம் நூத்தப்பூரில் உள்ளது. என் அப்பாவுடன் உடன் பிறந்த 4 நபர்களும் நூத்தப்பூரில் உள்ள விவசாய நிலத்தில் ஆளுக்கு ஒன்றரை ஏக்கர் என பிரித்துக் கொண்டனர். எனது பெரியப்பா தங்கவேலும், கருப்பையாவும் அவர்களுக்குரிய பங்கை எதிரி சீனிக்கு விற்றுவிட்டனர். எங்களுக்கு சொந்தமான ஒன்றரை ஏக்கர் நிலத்தில் நாங்கள் விவசாயம் செய்தோம். என்னுடைய அப்பாவிற்கும் அவருடன் பிறந்தவர்களுக்கும் சொந்தமாக பொதுவான கிணறு மற்றும் மின்சார இணைப்பு உள்ளது. அவற்றை எழுதிக் கொடுக்கும்படி எதிரி

சீனி எங்களிடம் பிரச்சனை செய்து வந்தார். நாங்கள் முடியாது என்று சொல்லிவிட்டோம். நாங்கள் எங்களுக்கு சொந்தமான வீட்டு நிலத்தில் கடந்த 2022ம் வருடம் வீடு கட்டி பூச்சுவேலை செய்து வந்தோம். எதிரிகள் பிரச்சனை செய்தது சம்பந்தமாக நாங்கள் கைகளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தோம். மங்களமேடு காவல் ஆய்வாளர் இருதரப்பினரையும் விசாரித்து சமாதானம் செய்து வைத்தார். கடந்த 02.11.2022ம் வருடம் நாங்கள் வீட்டை பூசிக்கொண்டிருந்தபோது காலை சுமார் 11 மணியளவில் எதிரிகள் இருவரும் உருட்டுக்கட்டையுடன் வந்து எதிரி சீனி தேவிடியா மகளே நீ என்ன பெரிய ஆள் மயிராடி என்று என் அம்மாவை தகாத வார்த்தையால் பேசி உருட்டுக்கட்டையால் என் அம்மாவின் முதுகில் அடித்தார். எதிரி செல்வராசு என்பவர் என் அம்மாவின் தலை முடியை பிடித்து இழுத்து கன்னத்தில் அறைந்து காலால் வயிற்றில் எட்டி உதைத்து தள்ளினார். நான் என் தகப்பனார் மற்றும் அருகில் இருந்த நபர்கள் ஏன் அப்பெண்ணை இவ்வாறு அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி சீனி உருட்டுக்கட்டையை காட்டி தேவிடியா என்று தகாத வார்த்தையால் பேசி இனிமேல் வீடு கட்ட கூடாது என்றும், தன்னுடைய பிரச்சனையை முடித்துவிட்டு அதன்பிறகு வீடுகட்டுமாறும் கட்டினால் கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டினார். எனது தங்கை ரம்யா 108 ஆம்புலன்சு மூலமாக எனது தாயாரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தார். சிகிச்சையிலிருந்த போது சம்பவம் குறித்து போலிசார் தாயாரை விசாரித்தனர். போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். எனது தாயார் அளித்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிர்தரப்பு வழக்கறிஞர் முன்வரவில்லை,

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.